ஒரு குறித்த காலத்திற்குள் அவர்களுக்கு வழங்குவதன் மூலம் இந்த நிதியாண்டிலாவது, அரசு கட்டிக் கொடுக்கக் கூடிய தொகுப்பு வீடுகள் அவர்களுக்குக் கிடைப்பதற்கு உதவிகரமாக இருக்கும் என்ற வகையிலே ஒரு காலத்தை நீங்கள் குறித்து அறிவிக்க வேண்டும். அவ்வாறு அரசு அறிவிக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எம். ஆனந்தன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது குடியிருந்து வரும் பகுதியாளர்கள், குளத்துப் புறம்போக்கில் இருந்து வருகிறார்கள். ஆகையினால் தான் அரசு தனியார் நிலத்தை ஆர்ஜிதம் செய்து நடவடிக்கை எடுத்து வருகிறது. மிக விரைவில் கொடுப்பதற்கு நடவடிக்கை துரிதப்படுத்தப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

முற்பகல் 10-35

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண். 100; திரு. கா. சின்னசாமி; மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர்

100—

மலைவாழ் மக்களுக்கு புதிய சாலை வசதி.

*3970—திரு. கா. சின்னசாமி :

மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) சேலம் மாவட்டம், இராசிபுரம் வட்டம், முள்ளுக்குறிச்சியிலிருந்து பூசனிக்குழி வழியாக நரியன்காடு வரை கொல்லி மலைக்கு மலைவாழ் மக்கள் பயனுக்காக புதிய சாலை அமைக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. எம். ஆனந்தன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) வினா எழவில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாக்கள்-விடைகள் நேரம் முடிவுற்றது.

(குறிப்பு ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடம் பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.)